# மனித உரிமைகள் மீட்பு

மாதமிருமுறை இதழ்

உரிமை - 8 மீட்பு - 01 ஏப்ரல் 1 - 15 | 2023 விலை 20 / -




உலகில் நேர்மைக்கு புகழ் பெற்ற அமுதா ஐ.ஏ.எஸ் பார்வைக்கு...



தமிழக முதல்வர் கண்டு கொள்வாரா?




தஞ்சாவூர் மாவட்டம் உதவி இயக்குநர் (ஊராட்சி) திரு. சங்கர் AD மற்றும் பட்டுக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. கோவிந்தராஜ் BDO

இருவரும் இணைந்து

## ஜல் ஜீவன் திட்டத்தில் பல கோடி ஊழல்!

# உதவி இயக்குநர் திரு. சங்கர் அவர்களுக்கு பாமரனின் கடிதம்...

ஊழல்... ஊழல்... எங்கும் ஊழல்...

எதிலும் ஊழல்...

ஏன் இப்படி போனது நம் இனம்...

மனித நேயம் மறந்து போன சில நரக மாமிசங்களால்

ஆம் அவர்களை மனிதர்கள் என்று சொல்வதால்

மனித இனத்திற்கே உன்னால் இழுக்கு என்று எண்ணுகின்றேன்...

கடமையை செய்ய ஏழ்மையிடம் ஏமாற்றி பெறும்

இந்த ஊழல் பணம்...

நீ இறந்தால் உன்னை எரிப்பதற்கு கூட உதவாது

அப்படியிருக்க நீ இருக்கும் போதா உதவப்போகிறது?

என எப்போது தான் நீ உணரப்போகிறாய்...?

நரக மாமிசமே...

நீ மண்ணோடு போகையில் உன்னோடு
ஒட்டியிருக்கும்

அரைஞான் கயிறையும் கூட
வெட்டி எடுக்கும் ...

என்பதை எப்படி மறந்தாய் நீ...

இதுவரை நீ இடுகாடே போனதே
இல்லையா?

இல்லை இனிமேலும் நீ இடுகாடு போக
போவதேயில்லையா...?

ஊர் வயிறெரிய நீ வாங்கும் அந்த ஊழல்
பணம்...

எப்படி உன் சந்ததி காக்கும்...?

உன் ஆறாம் அறிவு கொண்டு ஊரை ஏய்த்தது
போதும்...

இனியேனும் அதை உன்னை மாற்றிட
பயன்படுத்து...

உன் இருண்ட பயணத்தை இதோடு நிறுத்து...

உன் எஞ்சிய பயணத்தையாவது மனிதனாய் தொடர்ந்திடு...

உன் வருங்கால சந்ததிக்கு வளமான அடித்தளம் அமைத்திடு...

ஊழல் ஒழி... உண்மையாய் உழை

மனிதனாய் வேண்டாம்...

தயவு செய்து நல்ல அதிகாரியாக மாறு...



# மனித உரிமைகள் மீட்பு

## (மாத இருமுறை இதழ்)

வெளியீட்டாளர்: M. அப்துல்ரகுமான்

உரிமை-8 மீட்பு-01 ஏப்ரல் 1-15 | 2023



**ஆசிரியர்:** நீலகிரி K. மதுசூதனன்.

**இணை ஆசிரியர்:** புதுவை K. ராஜாராம்குமார்.

**தொகுப்பு ஆசிரியர்:** வேலூர் M. ராமச்சந்திரன்.

**சிறப்பு உதவி ஆசிரியர்:** தேனி AR. நாசர்கான்.

**சிறப்பு துணை ஆசிரியர்:** நாகர்கோயில் Dr. S முகமது அலி,

**சிறப்பு செய்தி ஆசிரியர்:** வாணியம்பாடி G. வெங்கடேசன்.

**பொறுப்பு ஆசிரியர்:** பெரம்பலூர் M. இளவரசன்.

**தலைமை செய்தி ஆசிரியர்:** நாகர்கோயில் C.J. சுதர்மன்.

**கௌரவ ஆசிரியர்:** கிருஷ்ணகிரி Dr. குமரவேல்.

**தலைமை ஆசிரியர்கள்:** Dr. முகம்மது காசிம், Dr. K. கலைச்செல்வன்.

**முதன்மை ஆசிரியர்கள்:** பரமகுடி S. பதர்னிஷாபேகம், R.M நந்தினி, T. அரவிந்தன், Dr. P. முருகேசன், கேரளா P.K. பிரதிஷ்.

**நிர்வாக ஆசிரியர்கள்:**

Dr M. ஹரிகிருஷ்ணன், M. காதர் முகைதீன்.

**கௌரவ இணை ஆசிரியர்கள்:** R. அகிலேஷ், A. கேம்ராஜ் SGM. ரமேஷ், D.G. தினகரன், N. அன்பழகன், A. பிரபாகரன், S.A. சையதுமுகைதீன் ஆலிம், S. லோக சுந்தரம், A. விஜி, R. ரத்தீஷ், C.சதிஷ்.

**கௌரவ செய்தி ஆசிரியர்கள்:**

M. ஞானசேகர், R. சந்திரபோஸ்.

**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:** S. ரமேஷ், R. சாம் எட்வர்ட்.

**செய்தி ஆசிரியர்கள்:**

M. ராமச்சந்திரன், புதுவை S செல்வமணி.

**கௌரவ இணை ஆசிரியர்:** A.R. பத்மநாதன், RNS. வெங்கடேஷ்வரா

**முதன்மை துணை ஆசிரியர்கள்:** M. தனராஜ், M. லோகேஷ்.

**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:**

D. கென்னடி, L.S. மனோகரன், S. தினேஷ்ராஜ், M. இளங்கோவன்.

**தலைமை இணை ஆசிரியர்கள்:**

G. திருச்செந்தில்வேல், T. செந்தில்குமார், ST ஜோசப், K. சதீசன்.

**தலைமை கௌரவ ஆசிரியர்கள்:**

M. கார்த்திக், A. ஷபீக் ரகுமான்.

**தொகுப்பு இணை ஆசிரியர்கள்:**

M. விஜயகுமார், S.B. ரவிக்குமார்.

**தொகுப்பு துணை ஆசிரியர்கள்:**

C. பெருமாள், J. கோவிந்தராஜ், C. அய்யாவு.

**துணை ஆசிரியர்கள்:**

D.சுரேஷ்குமார், G.சுரேஷ்.

**கௌரவ துணை ஆசிரியர்கள்:**

P. சதீஷ், G. அருள்செல்வன், D. கோபிநாத், P. உதயகுமார், A.T. அஷ்ரப், S. ரவிக்குமார், M. ஜெய்பிரசாத்

**உதவி ஆசிரியர் குழு:**

K. நமச்சிவாயம், S. சரவணன், M.S. ஆரோக்கியசாமி, M. விஜயேந்திரன். K. தம்புசாமி, முசா(எ)சாகுல் ஹமீது, Dr. ஸ்டேன்லி மோசஸ், Dr. L. ரமேஷ், A.S. அருண்குமார், A. முஜிபுர் ரகுமான், M. மாலா, M. ஆனந்தராஜ், AMS. ஹம்சத்அலி, R. சுப்பு, D. ராஜீவ்காந்தி, S. முரளிதரன், T. சுதாகர், S. கலாநிதி, G. கலையரசன், M. நாகராஜ், கிஷோர் குமார், ஜெயின் சன்சா, R.மலர்கொடி.

**நிருபர்கள்:**

M. தயாநிதி, S. சுல்தான்அலாவுதீன், M.சுரேஷ்குமார், M. செய்யது சகாபுதீன், S. சீனிவாசன், S. கிருஷ்ணன், P. வேல்முருகன், A. பார்த்திபன், S. சுரேஷ், S. சுப்ரமணி, லாசரஸ் கோவல், D. வில்வநாதன், G. ஜாபர் அலி, Dr.A. அருள்சாமி, V. முத்துகுமரேசன், S. சுந்தரமூர்த்தி, C. பிரபாசிங், M.J. சீனிவாசன், B. செல்வமணி, Dr. முஸ்தபா, S. லோகநாதன், A. முகமது தௌபிக், M. ஈஸ்வரி, V. ராஜாமுகமது, I. இப்ராஹிம், S.S. சஹாபுதீன், A. முகமது இதிரீஸ், R. ஜெயாகிருஷ்ணன், K. ரஜமோனி, A. விஜயசிங்கம், G. குமரேசன், M. அஹமத்முஸ்தபா ஆலிம், M. தமிழ்செல்வன், Y. முபாரக், ரியாஸ் அகமது, R. முகமது ஷெரீப், முஜிபூர்ரகுமான், S. சசிகுமார், R. ரவி, A. அமிர்தவேல், Y. மைதின் ஷசா, V. செல்வராஜ், S. சபாபதி, Dr. டார்வின் ஜான், ஜெயசுனிதா, R. சுதாகர், A. செல்வராஜ், C. அய்யாவு, K. சின்னராஜா, N. சுரேஷ், Y. முபாரக் அலி, S. ரியால் அகமது, M. கோவிந்தராசு, முரளி (எ) பிரேம்குமார், S. பாலமுருகன், S. தென்னரசு, Dr. ஜான் டைட்டஸ் இம்மானுவேல், R. பிரஸ்டன்ட், R. டேனியல், சத்திய நாராயணன், இர்பான், W. பீட்டர், கார்த்திகேயன், சரவணன், ஜான் மார்க், கோபாலகிருஷ்ணன், B. புஷ்பலதா, C. பெருமாள், K.A. செல்வராஜ், K. குணசேகரன், M. கலந்தர் முகைதின், S. சுந்தரமூர்த்தி, M. சுரேஷ், P. சிவகாமி, உபகாரம், ஆறுமுகம், A. பாலசுப்பரமணியன், தாமரைகனி, K. மணிகண்டன், M. பாலமுருகன், R. நாகராஜன், வேலுச்சாமி, K.S.சசிகுமார், L. ராஜகணபதி, A. ஜாபீர், M.மனோஜ், S. வெங்கடேஷ்குமார், G.ஜெயபிரகாஷ், S.ரபி, N.ஜெய்கணேஷ், M.ராஜா, M.தயாளன், K. விஜயகுமார், P. கிரேசி எலிசபத்மேரி, A.சக்திவேலு, V.சக்திவேல், D.சிவப்பிரகாசம், R.விவேக்கமல், K.ராஜா.

**சட்ட ஆலோசகர்கள்:**

C. பாலாஜி BABL, M. ஞானசேகரன் BABL.

**புகைப்பட நிருபர்கள்:**

AMS. சல்மான் அஹமது, A. குர்சித் ஆலம் கான், R.S. ராஜேந்திரன், R. ரவி, V. வித்யாவீரப்பன், Dr.R. செல்வராணி. K. ஷக்கீனா சொர்ணலதா, மதிவிழி.



**இந்த இதழ் குறித்த அனைத்து தொடர்புகளுக்கும் முகவரி:**

ஆசிரியர்,

**மனித உரிமைகள் மீட்பு (மாத இருமுறை இதழ்)**

எண்:2/115D1, ஆன்டாஞ்சிரா, கொன்னச்சால் Po,
எருமாடு, பந்தலூர் தாலூக்கா, நீலகிரி மாவட்டம்,
தமிழ்நாடு-643239. செல்: 9543410000
Mail: manithurimaigalmeetpu@gmail.com
http://internationalhumanrightswatch.org


"மனித உரிமைகள் மீட்பு" இப்பொழுது ஆன்லைன் செய்திகளாய் உலகமெங்கும். https://youtube.com/@manithaurimaigalmeetpu5936 என்ற Youtube மூலமாக காணலாம் மற்றும் சமூக வலைத்தளத்தில் பகிரலாம்.


எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உயர்நீதிமன்றத்தின் வரம்புக்கு மட்டுமே உட்பட்டவை. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு மனித உரிமைகள் மீட்பு இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் சிறப்பு கட்டுரையாளர்கள் இன் கருத்துகள் அவர்களின் சொந்த கருத்துகளே.


## முக்கிய அறிவிப்பு

**மனித உரிமைகள் மீட்பு பத்திரிக்கை சங்கங்கள் இல்லை. மனித உரிமைகள் மீட்பு என்பது இந்திய பத்திரிக்கை துறையில் RNI பதிவு பெற்ற பத்திரிகையாகும். சில நபர்கள் மனித உரிமைகள் என்ற பெயரில் அமைப்புகள் மற்றும் சங்கங்கள் போன்று செயல்பட்டால் பத்திரிக்கை நிர்வாகம் பொறுப்பேற்காது.**

**இப்படிக்கு**
**-ஆசிரியர்**



# தஞ்சாவூர் மாவட்டம் உதவி இயக்குநர் (ஊராட்சி)

## திரு. சங்கர் AD

# மற்றும் பட்டுக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்

## திரு . கோவிந்தராஜ் BDO

## இருவரும்  இணைந்து

# ஜல் ஜீவன் திட்டத்தில் பல கோடி ஊழல்!

சாலைகளின் தரம் உயர்த்துதல் ஊழல்
பாலங்கள் கட்டுதல் ஊழல்
பழுதடைந்த சாலைகளை புதுப்பித்தல் ஊழல்
கிராம தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல் ஊழல்
புதிய தெருவிளக்குகள் அமைத்தல் ஊழல்
தெரு விளக்குகளை பராமரித்தல் ஊழல்
பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் ஊழல்
குடிநீர் பராமரிப்பு பணிகள் ஊழல்
பொது சுகாதாரத்தை மேம்படுத்துதல் ஊழல்
சுற்றுச்சூழல் மாசுபடுவதை தடுத்தல் ஊழல்
இடுகாடு மற்றும் சுடுகாடு ஆகியவற்றை அமைத்து பராமரித்தல் ஊழல்






தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏரிபுறக்கறை கிராமத்தில் குடிநீர் இணைப்புக்கட்டணமாக ரூ.1,200 நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், ரூ.6 ஆயிரம் வரை கட்டாய வசூல் செய்யப்படுவதாக புகார் எழுந்துள்ளது

வரும் 2024ம் ஆண்டிற்குள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடி நீர் வழங்கும் இலக்குடன் ஜல் ஜீவன் மிஷன் என்கிற திட்டம் மத்திய அரசால் கடந்த 2019ம் ஆண்டு சுதந்திர தினத்தன்று தொடங்கப்பட்டது. மாநில அரசின் பங்களிப்புடன் நடைபெறும் இத்திட்டத்தில், மக்கள் குடி நீருக்காக அலையும் நிலையைப் போக்கி, 55 லிட்டர் வரை குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பாக கிராமப் பகுதிகளில் அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதற்கு தனி நிதி ஒதுக்கீடும் செய்யப்படுகிறது. கிராம ஊராட்சிகளில் இத்திட்டத்தை செயல்படுத்த குறைந்தபட்ச வைப்புத் தொகையை நிர்ணயம் செய்து கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### ஜல் ஜீவன் என்றால் என்ன..?

கிராம தண்ணீர் வழங்கு அமைப்புகளின் திட்டமிடல், செயல்படுத்தல், மேலாண்மை, செயல்பாடு மற்றும் பராமரிப்பில் தண்ணீர் வழங்கும் குழுக்கள் (பானி சமிதி) முக்கியப் பங்கு வகிக்கிறது. இதன் மூலம் ஒவ்வொரு வீட்டிற்கும் சீராக நீண்டகால அடிப்படையில் சுத்தமான தண்ணீரை குழாய் மூலம் வழங்குகிறது. 6 லட்சத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில், சுமார் 3.5 லட்சம் கிராமங்களில் தண்ணீர் வழங்கும் குழுக்கள் (பானி சமிதி)/ கிராமப்புற தண்ணீர் மற்றும் துப்புரவு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 7.1 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்களுக்கு கள பரிசோதனை கருவிகளைப் பயன்படுத்தி நீரின் தரத்தை பரிசோதிக்க பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஜல் ஜீவன் இயக்கம் பற்றி பிரதமர் ஒவ்வொரு வீட்டிற்கும் சுத்தமான தண்ணீரை குழாய் மூலம் வழங்க 15 ஆகஸ்ட், 2019 அன்று, ஜல் ஜீவன் இயக்கத்தை அறிமுகம் செய்தார் அந்த இயக்கம் தொடங்கிய நேரத்தில், 3.23 கோடி கிராமப்புற வீடுகளுக்கு மட்டுமே குழாய் வழி குடிநீர் இணைப்பு வழங்கப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் கொரோனோ தொற்றுநோய் நெருக்கடி இருந்தபோதிலும், 5 கோடிக்கும் அதிகமான வீடுகளுக்கு குழாய் வழி தண்ணீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இன்றுவரை, சுமார் 8.26 கோடி கிராமப்புற குடும்பங்கள் தங்கள் வீடுகளில் குழாய் வழி தண்ணீர் விநியோகத்தைப் பெற்றுள்ளன. 78 மாவட்டங்கள், 58 ஆயிரம் கிராம பஞ்சாயத்துகள் மற்றும் 1.16 லட்சம் கிராமங்களில் உள்ள ஒவ்வொரு கிராமப்புற வீடுகளும் குழாய் வழி தண்ணீர் விநியோகத்தைப் பெறுகின்றன.



இத்திட்டத்தின் கீழ் பொது மக்கள் பங்களிப்பு நிதியாக ரூ. 1, 200 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த தொகையையும் உடனே செலுத்த கட்டாயப்படுத்தவில்லை. கட்டணம் செலுத்தவில்லை என்றாலும் குடி நீர் இணைப்பு வழங்கப்படுகிறது.

ஜல் ஜீவன் திட்டம் அனைவருக்கும் குடிநீர் வழங்கல் திட்டம்

முந்தைய தண்ணீர் விநியோகத் திட்டங்களில் இருந்து ஒரு முன்னுதாரணமாக, ஜல் ஜீவன் திட்டம் தண்ணீர் விநியோகத்திற்கான உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள், தண்ணீர் விநியோகம் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. எவரையும் விட்டுவிடாமல் சுத்தமான குடிநீர் வழங்குவதே ஜல் ஜீவன் திட்டத்தின் குறிக்கோளாகும்.





ஊராட்சி செயலாளர் கலா

### கிராம ஊராட்சிகளின் சட்டரீதியான கடமைகள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 110ன் படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளுதல் கிராம ஊராட்சிகளின் கட்டாய கடமைகளாகும்.

அனைத்து கிராமச் சாலைகள், பாலங்கள், சிறுபாலங்கள், தடுப்புச்சுவர்கள் மற்றும் தரைப்பாலங்களை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் (நெடுஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தவிர) குடியிருப்பு பகுதிகளில் தெரு விளக்குகள் அமைத்தல்.

கழிவு நீர்க் கால்வாய் அமைத்துக் கழிவுநீரை வெளியேற்றுதல்.

தெருக்களை சுத்தம் செய்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை செயல்பாட்டின் மூலமாக சுகாதாரத்தை மேம்படுத்துதல்.

பொதுக்கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்

இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளை ஏற்படுத்திப் பராமரித்தல் குடிநீர் வழங்குதல், சமுதாய சொத்துக்களை பராமரித்தல் கிணறுகள் தோண்டுதல் மற்றும் பராமரித்தல் மற்றும் குளம் தோண்டுதல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல்.

அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாகப் பணிக்கக்கூடிய பிற கடமைகள்

### குடிநீர் வழங்கல்

ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணி, கிராம ஊராட்சியின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும். கிராம ஊராட்சிகளில், கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் முதன்மைக் குடிநீர் ஆதாரமாகவும், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் சிறிய நீர்த்தேக்கத் தொட்டிகள் முதன்மைக் குடிநீர் சேகரிப்பு அமைப்புகளாகவும் விளங்குகின்றன.

ஏற்கனவே உள்ள குடிநீர் ஆதாரங்களுடன், 2016 17 ம் ஆண்டில் 51,895 குடிநீர்



பணிகள் தமிழ்நாடு குக்கிராம வளர்ச்சித் திட்டம், உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி திட்டம், மாநில நிதிக்குழு மானியம் மற்றும் கிராம ஊராட்சிகளின் பொது நிதி ஆகிய திட்டங்களில் ரூ. 544.65 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### வறட்சிக் காலத்தில் குடிநீர் விநியோகம்

2016 17ம் ஆண்டில், பருவ மழை பொய்த்ததன் காரணமாக, மாநிலத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. 140 ஆண்டுகளில் இல்லாத அளவில் கடந்த ஆண்டு மிகக் குறைந்த அளவில் மழை பெய்தது.

இதன் விளைவாக நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததோடு மட்டுமல்லாமல் குடிநீர் ஆதாரங்களும் வறண்டு விட்டதால், ஊரக பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யும் பணி ஊராட்சி நிர்வாகத்திற்கு சவாலாக இருந்தது. இருப்பினும் இப்பிரச்சினைகளை சமாளிக்க அனைத்து நிதி ஆதாரங்களையும் ஒருங்கிணைத்து தேவையான முன் ஏற்பாட்டு நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டு, முறையாக குடிநீர் விநியோகம் செய்தது.




### நிலைமையை கையாள பின்பற்றிய வழிமுறைகள்

கீழ்க்காணும் நட்டிவக்கைகளை குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய பின்பற்றுமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து குடிநீர் ஆதாரங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு குடிநீர் பிரச்சினையை எதிர்கொள்ள கிராம ஊராட்சி வாரியாக செயல் திட்டம் தயாரிக்கப்பட்டது.

போர்க்கால அடிப்படையில் பழுது நீக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடிநீர் ஆதாரங்கள் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன. ஊரக வளர்ச்சித் துறை, குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அலுவலர்களுடன் ஒருங்கிணைப்பு கூட்டம் மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் வாரந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது.

மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து பெறப்பட்ட ரூ.15 கோடி குடிநீர் பணிகளுக்காக செலவிடப்பட்டது. குடிநீர் பற்றாக்குறை நிலவும் ஊரகப்பகுதிகளில் மத்திய மற்றும் மாநில நிதிக்குழு மானியம், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பொது நிதி ஆகியவற்றை குடிநீர் விநியோக பணிகளுக்கு மட்டும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் பயன்படுத்தின.

குடிநீர் விநியோகத்தை கிராம ஊராட்சி அளவில் கண்காணிப்பதற்கு மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களும், வட்டார அளவில் கண்காணிப்பதற்கு உதவி இயக்குநர் நிலையிலான அலுவலர்களும் நியமனம் செய்யப்பட்டனர்.

குடிநீர் தட்டுப்பாடு தொடர்பான புகார்களை பதிவு செய்ய மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் குறை தீர் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் வரையறுக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்படாத கூறுகளும் குடிநீர் விநியோக பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டன.

குக்கிராம அளவில் தினசரி குடிநீர் விநியோகத்தினை இணையதளம் மூலம் கண்காணித்தல்

தேசிய தகவலியல் மையத்தின் உதவியோடு ஊரகப் பகுதிகளில் குக்கிராம அளவில் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதை தினசரி இணையதளம் மூலம் கண்காணிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### தெரு விளக்குகள் பராமரித்தல்

ஊரக பகுதிகளில் தெருவிளக்குகளை பராமரிப்பது, கிராம ஊராட்சிகளின் அடிப்படை கடமைகளில் ஒன்றாகும்.

அரசாணை எண் 92 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள்26.03.1997 ன் படி அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 131 வரையிலான படிவங்கள் பராமரிக்கப்பட வேண்டும்.

படிவம் எண் 1. வீட்டு வரி கேட்புத் தொகைக்கான அறிவுப்பு.

படிவம் எண் 2. வீட்டு வரி இரசீதுகள்.

படிவம் எண் 3. வீட்டு வரி (நிலுவை தொகை நடப்பு வரித்தொகை).

படிவம் எண் 4. தொழில் வரி பற்றுச்சீட்டு.

படிவம் எண் 5. தொழில் வரி பற்றுச்சீட்டு (நிலுவை தொகை நடப்பு வரித்தொகை).

படிவம் எண் 6. பல்வகை பற்றுச்சீட்டு.

படிவம் எண் 7. வரிகள் மற்றும் பல்வகை இனங்களில் வசூல் பதிவேடு.

படிவம் எண் 8. மானியங்களில், ஒதுக்கப்பட்ட இனங்களில் வசூல் பதிவேடு.

படிவம் எண் 9. கிராம ஊராட்சி நிதி சிட்டா.

படிவம் எண் 10. பல்வகை வரவு வசூல் நிலுவை பதிவேடு.

படிவம் எண் 11. ரொக்கப் புத்தகம் (கிராம ஊராட்சி நிதிக் கணக்கு).




படிவம் எண் 12. திருப்பி வசூலிக்கதக்க முன் பணங்கள் பதிவேடு.

படிவம் எண் 13. வகைப்பாடு செய்யப்பட்ட தொகை செலுத்தங்கள் பதிவேடு.

படிவம் எண் 14. பற்றொப்ப பதிவேடு.

படிவம்எண்15.மதிப்பீடுகள் மற்றும் ஒதுக்கீடு பற்றிய பதிவேடு.




படிவம் எண் 16. கிராம ஊராட்சியின் சொத்துக்கள் பற்றிய பதிவேடு.

படிவம் எண் 17. பராமரிப்பு பதிவேடு ஊராட்சியில் சொத்துக்கள் பராமரிப்பு செலவுகள் ஆகியவை பதிவு செய்யப்பட வேண்டும்.

படிவம் எண் 18 ஊராட்சியில் வாங்கப்படும் பொருட்களின் விபரங்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

படிவம் எண் 19. செலவுச்சீட்டு இரசீது புத்தகங்களின் விவரங்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

படிவம் எண் 20 . தொகை மதிப்பு படிவங்கள் குறித்து இருப்பு பதிவேடு ,அளவுச் சுவடிகள் ,ஒப்பந்த படிவங்கள் முதலியவை.

படிவம் எண் 21. விற்பனைப் பதிவேடு (முடங்கு பொருள் பதிவேடு)

படிவம் எண் 22. கட்டுமானப் பொருள்கள் குறித்த பதிவேடு

படிவம் எண் 23. ரொக்கப்புத்தகம் ( மானியங்களின் வரவினங்கள்) பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

படிவம் எண் 24. ரொக்கப்புத்தகம் ( அளிக்கப்பட்ட மானியங்கள்) பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

படிவம் எண் 25. மதிப்பீடுகள் மற்றும் ஒதுக்கீடு பற்றிய பதிவேடு (அளிக்கப்பட்ட மானியங்கள்) பதிவேடு.

படிவம் எண் 26. ரொக்கப் பதிவேடு புத்தகம் (திட்ட நிதி).

படிவம் எண் 27. வகைப்படுத்தப்பட்ட தொகை

வரவுகள் மற்றும் தொகைச்செலவுகள்(திட்ட நிதி கணக்கு).

படிவம் எண் 28. திட்ட பணிகள் பதிவேடு மதிப்பீடுகள் மற்றும் ஒதுக்கீடு பற்றிய பதிவேடு(அளிக்கப்பட்ட மானியங்கள்) பதிவேடு.

படிவம் எண் 29. திட்டத்தின் மூலம் பயன் அடைந்தோர் விபரம் அடங்கிய பதிவேடு

படிவம் எண் 30. ஆய்வாளர்க்கு அனுப்ப வேண்டிய மூன்று வகை கணக்கு வரவு செலவு குறித்த மாதாந்திர விபரம்


படிவம் எண் 31. சென்ற ஆண்டின் வரவு செலவும் எதிர் வரும் ஆண்டிற்னு உத்தேசமாக மேற்கொள்ளவுள்ள வரவுசெலவு விபரம் குறிக்கப்பட வேண்டும்.

கிராம சபை கூட்டத்தில், மேலே குறிப்பிட்டுள்ள, அனைத்து படிவம் மற்றும் பதிவெடுகளை, பொது மக்கள் மத்தியில் பார்வைக்காக, கண்டிப்பாக வைக்க பட வேண்டும்.

ஆனால் AD சங்கர் அவர்கள் ஊராட்சி செயலாளர்களிடம் லஞ்சம் வாங்கி கொண்டு இதை ஒன்றும் கண்டுகொள்வதில்லை.

- அடுத்த இதழில் தொடரும்...






**நில மோசடி வழக்குகளை குறைக்கும் வகையில் வியாழக்கிழமை தோறும்**

# மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நில மோசடி அபகரிப்பு தடுப்பு கூட்டம் நடத்தப்படும்...

## மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஹரிகிரன் பிரசாத் பேட்டி

குமரி மாவட்டம் நாகர்கோவிலில் உள்ள மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஹரி கிரன் பிரசாத் தலைமையில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஈஸ்வரன் முன்னிலையில் பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது.

*அப்போது பேசிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் குமரியில் 5 வகை குற்ற சம்பவம் அதிகமாக நடைபெறுவதாகவும் இனி வரும் நாட்களில் இந்த வகையான குற்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க மாவட்ட காவல் துறை சார்பாக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்த அவர் குமரி மாவட்டத்தில் 4 மகளிர் காவல் நிலையங்கள் உள்பட மொத்தம் 33 காவல் நிலையங்களின் நுழைவு வாயிலில் 360 டிகிரி கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.*

*இதன் மூலம் காவல் நிலையங்களுக்கு*

புகார் அளிக்க வருபவர்கள் மற்றும் அதனை முறையாக பதிவு செய்யும் போலீசாரின் நடவடிக்கை ஆகியவற்றை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்தே கண்காணிக்க முடியும். இதற்காக காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறையில் 10 டி.வி. அமைக்கப்பட்டு போலீசார் 24 மணி நேரமும் கண்காணித்து வருவார்கள்.

மேலும் காவல் நிலைய வளாகத்தில் நடக்கும் குற்ற சம்பவங்களும் இதன் மூலம் கண்டறிய முடியும். கடந்த 4 வருட குற்றப்பதிவேடுகளை பார்க்கும் போது 5 வகை குற்ற சம்பவங்கள் குமரிமாவட்டத்தில் அதிகமாக உள்ளது. அதன்படி கடந்த ஆண்டு வேலைவாய்ப்பு மோசடி வழக்கு தொடர்பாக 400 புகார்கள் வந்துள்ளன. இதேபோல் பணமோசடி 796 வழக்குகளும் வரதட்சணை தொடர்பாக 100 வழக்குகள் அடிதடி மற்றும் கொலைமுயற்சி வழக்குகள் 580 நில மோசடியில் 400 வழக்குகளும் வந்துள்ளன. வேலைவாய்ப்பு மோசடி தொடர்பான வழக்குகளை குறைக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.




அதன் ஒரு பகுதியாக வேலை வாய்ப்பு தொடர்பான விளம்பரங்கள் வெளிவரும் போது சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் போலீசார் நேரில் சென்று ஆய்வு செய்வார்கள். இதன் மூலம் வேலை வாய்ப்பு நிறுவனங்களின் நம்பகத் தன்மை முதலில் அறியப்படும். அது போலியாக இருந்தால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். நில மோசடி வழக்குகளை குறைக்கும் வகையில் இனி வரும் காலங்களில் ஒவ்வொரு வியாழக்கிழமை அன்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நில மோசடி அபகரிப்பு தடுப்பு கூட்டம் நடத்தப்படும். இதில் வருவாய்த்துறை, பத்திரப்பதிவுதுறை, நிலஅளவையர் துறை மற்றும் போலீசார் கலந்து கொண்டு காவல் நிலையங்களில் உள்ள நில மோசடி வழக்கு தொடர்பாக விவாதிக்கப்பட்டு தீர்வு காணப்படும் எனவும் குமரி மாவட்டத்தில் இதுவரை நடந்த வாராந்திர மக்கள் குறை தீர்க்கும் முகாமில் 10,716 புகார்கள் பெறப்பட்டுள்ளன.

இதில் 2000 மனுக்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும்.மாவட்டத்தில் அதிக பாரம் ஏற்றி வரும் லாரிகள் மீது அபராத நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதல் முறை ரூ.2 ஆயிரமும் தொடந்து அதிக பாரம் ஏற்றி வரும் லாரிகளுக்கு ரூ.24 ஆயிரமும் அபராதமாக விதிக்கப்படுகிறது.

மேலும் போலீசாரின் எச்சரிக்கை அறிவிப்பையும் மீறி தொடர்ந்து அதிக பாரம் ஏற்றி வரும் லாரியின் உரிமையாளர் மீது 107இ 110 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப்பிதிவு செய்து ஒரு ஆண்டு ஜெயில் தண்டனை விதிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல் குமரி மாவட்டத்தில் கந்துவட்டி புகார்கள் இதுவரை 3 மட்டும் வந்துள்ளன. மேலும் கந்துவட்டி சம்பந்தமாக அலுவலகத்தில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை என்னிடம் நேரடியாக புகார் தெரிவிக்கலாம் எனவும் கந்து வட்டியில் ஈடுபடும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.



**- உதவி ஆசிரியர் H. ஹாஜாமைதீன்**




## RTI APPLICATION POINTS

# தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் கோரும் விண்ணப்பம் அனுப்பும் போது கவனிக்க வேண்டியவை...

❖ விண்ணப்பத்தின் தேதி மற்றும் இடம்.

❖ உங்கள் முழு முகவரி மற்றும் பொது தகவல் அலுவலரின் முழு முகவரி அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்...

❖ நீங்கள் முன்னர் எதாவது மனு அனுப்பி இருந்தால் மனுவின் விபரம். பார்வை: என்ற தலைப்பின் கீழ்

❖ எந்த தேதிக்குள் வழங்கப்படும்? என்ற கேள்வி....

❖ தேதியுடன் கூடிய உங்கள் கையொப்பம்....

❖ தகவல் கோரும் விண்ணப்பக் கட்டணம். ரூ.10 செலுத்தப்பட்டதற்கான சான்று. (நீதி மன்ற வில்லை எனில்(Court fees stamp) மனுவின் மேல் பாகத்தில் ஒட்டி விடலாம்.)

❖ நீதிமன்ற வில்லையை(court fees stamp) (ஒட்டியதும் உங்கள் விண்ணப்பத்தை ஒளிநகல் (xerox) எடுத்து வைக்கவும்

❖ விண்ணப்பத்தை ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவு தபாலில் அனுப்ப வேண்டும். (மேல் முறையீட்டின் போது ஒப்புதல் அட்டை முக்கியம்.

தகவல் பெறும் உரிமை சட்டத்தில் எந்தெந்த தகவல்கள் கேட்கலாம்?

❖ பதிவேடுகள் (Records),

❖ ஆவணங்கள் (Documents),

❖ மெமோ எனப்படும் அலுவலக குறிப்புகள். ( Memo Office Tips),

❖ கருத்துரைகள் (Comments),

❖ அதிகாரிகளின் கோப்பு குறிப்புகள்,

❖ அலுவலகங்களின் செய்தி குறிப்புகள் (Offices of the Information notes),

❖ சுற்றறிக்கைகள் (Circulars),

❖ ஆவணங்கள் (Documentation),

❖ ஒப்பந்தங்கள் (Agreements),

❖ கடிதங்கள் (Letters),

❖ முன்வடிவங்கள் (Model),

❖ மாதிரிகள் (Models),.

❖ கணினி சார்ந்த பதிவுகள் (Information stored in computer),

❖ மின்னஞ்சல்கள் (Emails).

❖ பொது நலன் சார்ந்த அனைத்து தகவல்கள் (All information of public good well),

❖ சம்மந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளைப் பரிசீலனை செய்யும் உரிமை, (The right to review relevant documents and records),

❖ நகல் எடுக்கும் உரிமை (Right to take Xerox) ஆகியன

தகவல் அறியும் உரிமை சட்டத்தில் மேல் முறையீடு:

பொதுத் தகவல் அலுவலர் 30 நாட்களில் தகவல் தரவில்லையென்றாலோ, அல்லது அவர் அளித்த தகவல் திருப்திகரமாக இல்லையென்றாலோ அந்தந்த துறைகளில் பிரிவு 19ன் கீழ் உள்ள மேல் முறையீட்டு அதிகாரியிடம் 30 நாட்களுக்குள் முதல் மேல் முறையீடு செய்யலாம்.

மேல் முறையீட்டு அதிகாரியின் பதில் திருப்திகரமாக இல்லையெனில் 90 நாட்களுக்குள் பிரிவு 19(3)ன் கீழ் மாநில தகவல் ஆணையரிடம் இரண்டாவது மேல் முறையீடு செய்யலாம்.

மாநில தலைமை தகவல் ஆணையர்,

தமிழ்நாடு தகவல் ஆணையம்,

2, தியாகராயசாலை,

ஆலையம்மன் கோவில் அருகில் ,

தேனாம்பேட்டை, சென்னை 600018.

தொலைப்பேசி எண்: 044: 2435 7581, 2435 7580.

தகவல் தர மறுத்தால் தண்டனை Sec 20 RTI Act தகவல் மறுத்தால் ரூ 25000 அபராதம் – ஒழுங்கு நடவடிக்கை....

பொது தகவல் அலுவலர் செய்யும் பின்வரும் செயலுக்கு ரூ 25000 அபராதம் மற்றும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக வேண்டிவரும்.

❖ நியாயமான காரனம் இல்லாமல் விண்னப்பம் வாங்க மறுத்தால்...

❖ உரிய காலகெடுவில் தகவல் தர மறுத்தால் (30 நாட்கள்)....

❖ தகவலுக்கான வேண்டுகோளை தீய எண்ணத்துடன் மறுத்தால்....

❖ தவறான, முழுமையுறாத, தவறான எணத்தை தோற்றுவிக்கும் வகையில் தகவலை தெரிந்தே கொடுத்தால்...




❖ தகவலை அழித்தால்....

❖ தகவல் கொடுப்பதை தடுத்தால்...

பிரிவு 20(1) படி நாள் ஒன்றுக்கு ரூ 250 வீதம் அபராதம்....

ரூ. 25,000 உயர்ந்த பட்ச அபராதம்...

பிரிவு 20(2) படி துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை...

மேற்படி காரணத்திற்காக தகவல் ஆணையகம் மட்டுமே தண்டனை விதிக்க முடியும்...

தண்டனை விதிக்கும் முன்பு பொது தகவல் அலுவலர் விளக்கம் கேட்ட பின்னர்தான் தண்டனை விதிக்க முடியும்.

நியாயமாகவும் கவணமாக செயல்பட்ட

பொது தகவல் அலுவலர் மீது தண்டனை விதிக்க இயலாது.

குறிப்பு: பொதுவாக தகவல் ஆணையகம் தண்டனை விதிப்பதை தவிர்க்கின்றது...

தண்டனைகள் (பிரிவு20)

மாநில தகவல் ஆணையமானது, புகார் அல்லது மேல்முறையீடு எதனையும்

**தீர்மானிக்கும்போது:**

❖ பொது தகவல் அலுவலர் நியாயமான காரணம் ஏதுமின்றி தகவலுக்கான விண்ணப்பம் ஒன்றினை மறுக்குமிடத்தும் ;

❖ பொது தகவல் அலுவலர் காலக்கெடு விற்குள் தகவலை அளிக்க மறுக்குமிடத்தும் ;

❖ பொது தகவல் அலுவலர் தகவலுக்கான கோரிக்கையினை உள்நோக்கத்துடன்

**மறுக்குமிடத்தும் ;**

❖ கோரிக்கையின் பொருளாக இருந்த தகவலை அழிக்குமிடத்தும் ;

❖ பொது தகவல் அலுவலர், தகவலை அளிப்பதை எந்த முறையிலும் தடுக்குமிடத்தும்; அந்த விண்ணப்பம் பெறப்படும் வரை அல்லது தகவல் அளிக்கப்படும் வரை ஒவ்வொரு நாளுக்கும் ரூ.250/ தண்டமாக, அந்த பொது தகவல் அலுவலர் மீது விதிக்கப்படும்.

எனினும், மொத்த தண்டத் தொகையானது ரூ.25,000/க்கு மிகாமல் இருக்க வேண்டும். இருப்பினும், தண்டம் விதிக்கப்படுவதற்கு முன்பு, சம்மந்தப்பட்ட பொதுத்தகவல் அலுவலருக்கு போதுமான வாய்ப்பளிக்கப்படுதல் வேண்டும்.

பொதுத்தகவல் அலுவலர், தான் நியாயமாகவும், கவனத்துடனும், செயல்பட்டுள்ளதை மெய்ப்பிக்கும் பொறுப்பு, அவரையே சார்ந்ததாகும்.

மேலும் மேற்கண்ட சூழ்நிலைகளில், பொதுத்தகவல் அலுவலருக்கு எதிராக, அவருக்கு பொருந்தத்தக்க பணிவிதிகளின்படி, ஒழுங்கு நடவடிக்கை எடுக்க சம்மந்தப்பட்ட துறைக்கு ஆணையம் பரிந்துரை செய்யும்.

- சிறப்பு துணை ஆசிரியர்: Dr. S. முகமது அலி



## என்று தீரும் நாகர்கோயில் மாநகரத்தில் உழைக்கும் ஏழை தாய்மார்களின் கதறல்...




**என்று தீரும் நாகர்கோயில் மாநகரத்தில் உழைக்கும் ஏழை தாய்மார்களின் கதறல் ...**

**அன்று**

*20 ஆண்டுகளாக நடத்தி வந்த தள்ளு வண்டி கடை பறிமுதல், 87வயது சுப்பையா பிள்ளை அவர்கள் தற்கொலை நீதி கேட்கும் வள்ளியம்மாள்.*

*போக்குவரத்து நெருக்கடி மிகுந்த சாலையில் நாகர்கோவில் நீதிமன்ற சாலையில் உள்ள ஆரியபவன் ஹோட்டல் மற்றும் மணிமேடை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் செல்லும் சாலையில் அமைந்துள்ள பிரபு ஹோட்டல். இங்கே இருசக்கர வாகனங்கள் நிறுத்திவைப்பு கண்டு கொள்ளாத நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகம்.*

**இன்று**

*ஒரு சாண் வயிற்றுக்காக போக்குவரத்து நெருக்கடி இல்லாத இடத்தில் உழைத்துப் பிழைக்கும் ஏழை தாயாரின் கதறல் காதில் கேட்கிறதா...?*

**- முதன்மை ஆசிரியர்கள்: R.M நந்தினி**

## வங்கிக்கு ரூ.25 ஆயிரம் அபராதம்

**நாகர்கோவில், ஏப். 8:** சேவைக் குறைபாடு காரணமாக, வங்கிக்கு ரூ.25 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

குமரி மாவட்டம், தென்தாமரைகுளம் பகுதியைச் சேர்ந்தவர் சார்லஸ் செல்வஜோஸ், ஓய்வு பெற்ற அரசு ஊழியர். இவர் அந்தப் பகுதியில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் தனது ஓய்வூதிய கணக்கை வைத்துள்ளார். தனது நண்பரான ராமையா என்பவர், வங்கியில் பெற்ற கடனுக்கு ஜாமீன் கையொப்பமிட்டிருந்தார். ராமையா திடீரென இறந்து விட்டதால், அவர் வாங்கிய கடன் தொகை நிலுவையில் இருந்தது.

இந்நிலையில், எந்தவித முன்னறிவிப்புமின்றி, ராமையாவின் கடன் பாக்கித் தொகைக்காக சார்லஸ் செல்வஜோஸ் கணக்கில் ரூ. 79 ஆயிரத்து 841 ஐ வங்கி பிடித்தம் செய்தது. இதனால் மன உளைச்சலுக்கு ஆளான சார்லஸ், வழக்குரைஞர் மூலம் வங்கிக்கு நோட்டீஸ் அனுப்பினார். அதற்கு உரிய பதில் கிடைக்காததால், கன்னியாகுமரி மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் வழக்கு தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த நுகர்வோர் குறைதீர் ஆணைய தலைவர் சுரேஷ், உறுப்பினர் சங்கர் ஆகியோர், தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் சேவைக் குறைபாட்டை சுட்டிக்காட்டி, வங்கிக்கு ரூ.25 ஆயிரம் அபராதமும், வழக்கு செலவு தொகையாக ரூ.5 ஆயிரம், மேலும் கணக்கில் பிடித்தம் செய்யப்பட்ட ரூ. 79 ஆயிரத்து 841 ஆகியவற்றை ஒரு மாதத்துக்குள் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

## வருத்தம் தெரிவித்து கடிதம்

*கடந்த 15:03 2023 அன்று வெளிவந்த மனித உரிமைகள் மீட்பு இதழில் 8-9ஆம் பக்கங்களில் வெளிவந்த கிரீன் சிட்டிரியல் எஸ்டேட் நிருவனம் சம்பந்தபட்ட பத்திக்கை செய்தி வெளியிட்டதில் திருமதி. அனிதா என்பவரது பெயர் வெளிவந்ததாகவும் அதன் காரணமாக மிகுந்த மன உளைச்சல் அடைந்ததாகவும் பத்திரிக்கை நிர்வாகத்திடம் தெரிவித்திருந்தனர்.*

*மனித உரிமை மீறல்களை எதிர்பதே எங்களது நோக்கமே தவிர தனிநபரை பழிவாங்கும் நோக்கில் செயல்படுவது அல்ல என்பதை தெரிவித்து கொள்கிறோம்.*

*செய்தி வெளியிட்டதன் காரணமாக அவர்களது மனம் புன்பட்டிருந்தால் வருத்தம் தெரிவித்து கொள்கிறேன் என்று ஆசிரியர் குழு சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.*

**இப்படிக்கு**

K. **மதசூதனன் (ஆசிரியர்)**



2021ம் ஆண்டு ரூ.10 லட்சம் வழிப்பறி செய்யப்பட்ட வழக்கில் சிக்கிய, நாகமலை புதுக்கோட்டை காவல் நிலையத்தில் பணியாற்றிய ஆய்வாளர் வசந்தி, காவல்துறை பணியில் இருந்து நிரந்தர நீக்கம் மதுரை சரக டி.ஐ.ஜி உத்தரவு

**- தலைமை ஆசிரியர் Dr. K. கலைச்செல்வன்**

# என் தட்டும் வயிறும் சோறில்லாமல்!



தொலைந்து போனேன்
தேடித் தொலைந்து போனேன்
எதிர்பார்த்து ஏமாந்து போனேன்
நேசித்து நொடிந்து போனேன்
என்னடா வாழ்க்கை என்றேன்
இனி எப்போதும் இறக்க துணிந்தேன்

போதி மரம் தேவையில்லை
நான் புத்தனாக போவதுமில்லை

துறப்பதற்கு ஒன்றும் இல்லை

துறவுகொள்ள போவதில் அர்த்தமில்லை

சிறுபிள்ளையாய் அழுது பார்த்தேன்
கேட்டது எதையும் தரவில்லை

அன்பாய் அழைத்து பார்த்தேன்
அவள் என்றும் வரவேயில்லை

கடன் வாங்கி காணிக்கைப் போட்டேன்
கண் திறந்து பார்க்கவே இல்லை

கண்ணீர் சிந்தி கல்லும் கரைந்திட
கல்லுக்குள் ஒளிந்திருக்கும் கடவுள்
கருணையின்றி இறுக்கிறார்

நான் முகம் கழுவுகையில் ஓடிய
தண்ணீரை பார்த்து திடுக்கிடுவிட்டேன் நான்.
ஒவ்வொரு நாளும் இவ்வளவு அழகையா
வேண்டாம் என்று
நான் நீரில் விடுகிறேன்

பிறகு...........
குருதிக்குடுவை நிறைய
பெருங்குணம் சுமந்தபடி
சமூகம் நோக்கினேன்,
தட்டிவிட்டபடி கையில்

சாக்குப்பை திணித்து
பணம் பொறுக்கும்படி
பரிவின்றி பணிக்கப்பட்டேன் !

உயர்கல்வி உடுத்தி
தெரு கடக்கும்போது
அழுத்தமாய் சிரித்தது
அழுக்குச் சமூகம் நீ
யாரென்பதை நின் முகம்
தவிர்த்து பண முகாமே
தீர்மானிக்கும் என்றபடி !

என் திறமைகளை
அளவீடு செய்ய மறுக்கும்
செவிட்டு உலகம்
செருப்பை உற்றுநோக்கி
என்னை கணிக்கிறது !

ஏறிஇறங்கிய உடுப்பற்ற
நான் ஏறஇறங்கவே
பார்க்கப் படுகிறேன் என்
அழுக்கற்ற அகம் பொசுங்க
பொய்த்தூய்மை தேடப்படுகிறது !

உண்மையை மடித்து
முதுகுக்குப்பின் ஒழித்து
போலிப் புன்னையோடு
காசோடு காதல்புரி உன்
நேர்மைக்கு தீயிட்டுவிட்டு !

பணக்கார காதல்களுக்கு
வாயிற்சீட்டும் ஏழைக்
காதல்களுக்கு வாய்ப்பூட்டும்
பட்டுவாடா செய்யப்படுகிறது
மேலும்சில காரணிகளோடு !

எங்கு திரும்பினும்
முகமதிப்பை மிதித்தபடி
பணமதிப்பை கேட்கும்
சமூகம் எனைத்தள்ளிய

இடம்தோறும் எனைப்போன்றே
பணப் பொறுக்குப் போருக்கு
பழக்கபடாத முகங்கள் !

ஓர் நாள் விடியும்
என்ற நம்பிக்கையை
நெஞ்சிலும் வறுமையை
முதுகில் சுமந்தபடி
வானவில் ரசிப்பதெப்படி...?
நிறைய அழு கண்ணீர்
கல்லறை கூட
சில்லறை இருந்தால்
வாய் திறந்தே மொழி பேசும்

இல்லாதவன் சொல்
சபையேறாமல்
ஏளனமாகப் பேசும்.."

தெய்வமே,
உன்னை என் இதயத்திலிருந்து
வெளியேற்றிவிட்டு,
ஒரு பெண்ணைக்
குடிவைத்ததற்காகக்
கோபித்துக்கொண்டு
என்னைக் கைவிட்டு விடாதே!

சுத்தம் சோறு போடும்
என்கிறீர்கள் !

இன்றுவரை
சுத்தமாகத்தான் இருக்கிறது

ஆனால்.....

என் தட்டும் வயிறும்
சோறில்லாமல் !

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000



# லஞ்ச ஒழிப்பு துறையால் பரிசுத்தமாக்கப்பட்ட குற்றவாளிகள்!

**லஞ்ச ஒழிப்புத்துறை நடவடிக்கையால் தண்டிக்கப்பட்டவருக்கும், போலி சோதனை நடத்தியவருக்கும் லஞ்ச ஒழிப்புத் துறையால் நற்சான்றுடன் பணி.**

*அதிர்ச்சி தகவல்கள்*

கன்னியாகுமரி மாவட்டத்தில் குமரி லஞ்ச ஒழிப்பு துறையால் குற்ற எண் 8/2008 என்று வழக்கு பதிவு செய்யப்பட்டு நடவடிக்கைக்கு உள்ளானவரை குமரி லஞ்ச ஒழிப்புத் துறையில் ஆய்வாளராக்கி பரிசுத்தமாக்கப்பட்டுள்ளார்.

இதன் மூலம் அவர் தவறு செய்ததாக பதியப் பட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் ஆறு மாத சஸ்பெண்ட் ஆகியவை கால சக்கரத்தில் சிக்கி அழிந்து போனதாக கூறப்படுகிறது. இதே போல குமரி மாவட்டத்தில் துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்த மதியழகன் என்பவர் மார்த்தாண்டம் வட்டார

போக்குவரத்து அலுவலகத்தில் போலியாக சோதனை நடத்தி லஞ்ச ஒழிப்புத்துறை உயர் அதிகாரிகளிடம் பெயர் வாங்க முயற்சித்த சம்பவத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் பொருத்தப்பட்டு இருந்த சிசிடிவி பதிவுகள் மூலம் அவருடைய வண்டவாளம் வெளிச்சத்திற்கு வந்தது.

மேலும் ஒப்பந்ததாரர் ஒருவர் முதலமைச்சரின் மரம் நடும் திட்டத்தில் ஊழல் செய்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதில் வனத்துறையினரும் அந்த வழக்கில் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டனர். அதில் முக்கியமான குற்றவாளியாக சேர்க்கப்பட்ட ஒப்பந்ததாரரை அரசு தரப்பு சாட்சியாக மாற்றி பிரதிபலன் பெற்று அவரை காப்பாற்றியதாகவும் நீதிமன்றத்தில் அவரை அரசு தரப்பு சாட்சியாக சாட்சி கூற வைத்த தகவலும் வெளியானது.

இவ்வாறு அந்த டி எஸ் பி யின் வண்டவாளம் எல்லாம் தண்டவாளத்தில் ஏறிய நிலையில் அவர் குமரி மாவட்டத்தில் இருந்து திருவண்ணாமலைக்கு மாற்றப்பட்டார். ஆனால் அவரை உடனே பரிசுத்தப்படுத்தி தென்காசி மாவட்டத்திற்கு லஞ்ச ஒழிப்புத்துறை டிஎஸ்பியாக நியமித்து திருநெல்வேலி மாவட்டத்திலேயே குறிப்பாக திருநெல்வேலி லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்திலேயே தற்போது இருக்க வைக்கப்பட்டுள்ளார். சமீபத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராகவும் பதவி உயர்வு பட்டியலில் இடம்பெற வைக்கப்பட்டு உள்ளதாக தெரிகிறது.


இவ்வாறு குற்றவாளிகளாக இருந்தவர்கள் தற்போது பரிசுத்தப்படுத்தப்பட்டவர்களாக மாற்றப்பட்டு அதே லஞ்ச ஒழிப்புத்துறையில் முக்கிய இடங்களிலேயே பணியமர்த்தப்பட்டு உள்ளது லஞ்ச ஒழிப்புத்துறை எந்த அளவிற்கு "சிறந்து விளங்குகிறது" என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு என்றே பெருமை கொள்ளும் விதத்தில் நம்மையெல்லாம் புல்லரிக்க செய்யும் விதத்தில் உள்ளது என்றால் மிகையல்ல.

லஞ்ச ஒழிப்புத்துறை தலைமையகத்தில் மிகச்சிறந்த உயர் அதிகாரிகளாக இயக்குனர் கந்தசாமி மற்றும் துணை இயக்குனர் லட்சுமி ஐபிஎஸ் ஆகியோர் இருக்கும் நிலையில் லஞ்ச ஒழிப்புத்துறையால் வழக்கு பதிவு செய்யப்பட்டவர் அந்த வழக்கில் குற்றவாளி என்ற நிலையிலும் மற்றொரு டிஎஸ்பி மதியழகன் லஞ்ச ஒழிப்புத்துறையால் பதிவு செய்யப்பட்ட வழக்கில் முக்கிய குற்றவாளியாக இருந்தவரை அரசு தரப்பு சாட்சியாக மாற்றி அந்த ஒப்பந்ததாரரை காப்பாற்ற வழக்கை குழி தோண்டி புதைத்த நிலையிலும் மற்றும் போலியாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் சோதனை நடத்தி சிசிடிவி மூலம் அவரது போலி சோதனை வெளியாகி லஞ்ச ஒழிப்பு துறைக்கு களங்கத்தை ஏற்படுத்திய நிலையில் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு பணியிட மாற்றம் செய்யப்பட்ட நிலையில் குறுகிய நாட்களில் தனது சொந்த மாவட்டமான திருநெல்வேலிக்கு அருகே தென்காசி மாவட்டத்திற்கு லஞ்ச ஒழிப்புத்துறை டிஎஸ்பி ஆகி திருநெல்வேலி லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்திலேயே உட்கார்ந்து பணி செய்ய பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் தான் லஞ்ச ஒழிப்புத் துறையில் பணியாற்றி வருகின்றனர் என்பது பெரும் அதிர்ச்சியாக உள்ளது.

**லஞ்ச ஒழிப்புத் துறையின் களங்கத்தை துடைக்க உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே குற்றவாளிகளின் புகலிடமாக லஞ்ச ஒழிப்புத்துறை மாறுவதை தடுக்க முடியும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது**

லஞ்ச ஒழிப்புத் துறையின் களங்கத்தை துடைக்க உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே குற்றவாளிகளின் புகலிடமாக லஞ்ச ஒழிப்புத்துறை மாறுவதை தடுக்க முடியும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது

- தலைமை செய்தி ஆசிரியர் C.J. சுதர்மன்



# மாட்டு வண்டி மணல் மாபியா...

**பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டம் அகரம்சீகூர் (பார்டர்). பெரம்பலூர் மாவட்டத்தின் கடைகோடியில் அமைந்துள்ளது. இந்த ஊரின் அருகில் அரியலூர் மாவட்டம் எல்லையும். கடலூர் மாவட்ட எல்லையும் ஆரம்பம் ஆகிறது.**

பெரம்பலூர் மாவட்டத்தின் எல்லையில் அமைந்துள்ளதால் அகரம்சீகூர் பஞ்சாயத்தில் சிரிய காவல்நிலையம் உள்ளது. காவலர்கள் அரசாங்கதின் அனுமதி இல்லாமல் லஞ்சம் பெற்றுக்கொண்டு மாட்டுவண்டியில் இரவு நேரங்களில் மணல் கொள்ளை அடிக்க அனுமதி வழங்கியுள்ளனர். அகரம்சீகூர் காவலர்கள் துணையோடுநடைபெறும் மணல்கொள்ளைய கண்டும்காணாமல் இருக்க மங்களமேடு காவல் நிலையத்திற்கு கட்டுக்கடாக லஞ்சபணம் கைமாறுகிறது.

இங்கு நடைபெறும் மணல் மாபியாவை தடுத்து நிறுத்தும் பொறுப்புள்ள பெரம்பலூர் மாவட்ட பறக்கும் படைஆய்வாளர்கள் கண்டு கொள்ளாமல் இருக்க கையூட்டு பெற்றுக்கொண்டு பேருக்காக இருவரை அழைத்து சென்று வழக்குபதிவு செய்வார்கள். அப்படி அழைத்து செல்லும் இருவரும் உண்மையான மணல் கொள்ளையர்கள் அல்ல மாறாக நாள் ஒன்றுக்கு 500 வீதம் எத்தனைநாள் காவலில் இருக்கபோகிறாறோ அத்தனை நாள் அவர்கள் குடும்பத்தாருக்கும் செலவுகள் உட்பட அனைத்தும் மணல்மாபியா செலவுசெய்வார்.

அகரம்சீகூர் பஞ்சாயத்தில் நடைபெறும் மணல் கொள்ளையை தடுக்காமல் லஞ்சம் பெற்றுக்கொண்டு ஊராட்சி மன்றதலைவர் கண்டுகொள்ளாமல் அவர்களுக்கு சாதகமாக செயல்படுகிறார். உதாரணமாக கடந்த தண்ணீர்தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு கிராமசபையில். சமூக ஆர்வலர்கள் நிலதடிநீர் உயர மாட்டுவண்டியில் மணல்கொள்ளை அடிக்கும் கும்பலை தடுக்க அகரம்சீகூர்(கிழக்கு) இளசந்து




பாதை முடியும் ஆற்றங்கரையில் JCB வாகனம் கொண்டு மாட்டுவண்டிகள் செல்லாதவாறு பெரியபள்ளம் தோண்டினால் மாட்டுவண்டியில் மணல் கொள்ளைதடுக்கலாம் என்று ஆலோசனை சொன்னார்கள் அதற்கு பதில் அளித்த ஊராட்சி மன்றதலைவர் மணல் மாபியா விசுவாசமாக ஆற்றங்கரையில் பள்ளம் தோண்டினால் மனிதர்கள் கீழேவிழுந்துவிடுவார்கள்.

அகரம்சீகூரில் புதியவீடு கட்டுபவர்கள் அவதிபடுவார்கள் என்றுவாதிட்டார். உடனே சமூக ஆர்வலர்கள் பஞ்சாயத்து மக்கள் வீடுகட்ட மணல் அள்ள அனுமதியை முறைப்படி அதிகாரிகள் வழங்குங்கள். மக்கள் வீடு கட்ட மணல்அடிக்க நாங்கள் எதிர்க்கவில்லை தினமும் பல ஆயிரம் டன் மணல் கொள்ளையை தடுங்கள் என்று வாதிட்டார்கள். மணல் மாபியாவிற்கு அனுமதிக்க காரணம் பல லட்சங்கள் லஞ்ச பணம் கிடைக்கிறது அதுமட்டும் இல்லாமல் இந்த மணல்கொள்ளையை அரங்கேற்றும் மணல் மாபியா வேரயாரும் இல்லைங்க முன்னால் ஊராட்சி மன்ற துணைதலைவர் தாங்க. இன்னால் தலைவர் முன்னால் துணைதலைவர் சேர்ந்து அகரம் சீகூரை ராஜஸ்தான் தார்பாலைவணம் போல இருந்த வெள்ளாறில் தார்போடாத சாலையாக வாகனங்கள் ஆற்றில் சென்று வரலாம்.

மேலும் பாலைவனம் போல அழகிய மணல் திட்டுகள் அதிகம் உள்ள ஆற்றில் மாட்டுவண்டியில் மணல் கொள்ளை அடித்து இப்போ அகரம்சீகூர் பகுதில் நிலதடி நீர் மட்டம் 300 அடி தோண்டினாலும் தண்ணீர் கிடைப்பதில்லை சில ஆண்டுகளுக்கு முன்பு குடிநீருக்காக ஆற்றில் ஊற்று தோண்டி தேனாய் இனித்த தண்ணீர் இப்போ துவர்ப்பு தண்ணீர் குடித்து பலவிதமான நோய்களுக்கு மக்கள் ஆளாக்கபடுகின்றனர். மக்கள் எக்கேடுகெட்டால் என்ன எங்கள் பை நிறைகிறது என்று கண்டுகொள்ளாத மங்களமேடு காவல் துறை மக்களுக்கு நல்ல குடிநீரை வழங்க நினைக்கும் மாவட்டநிர்வாகம் கடைகோடியில் உள்ள அகரம்சீகூரின் மீது கடைகண்பார்வை படுமா என்று மக்கள் எதிர்பார்த்து உள்ளனர்.

மாவட்டத்தின் வருவாய் பெருக்கும் வருவாய் ஆய்வாளர் மற்றும். அகரம்சீகூர் கிராமஆய்வாளர்(VAO) மற்றும் குன்னம் தாசில்தார் அவர்கள் பையில் வருமானம் கட்டுகட்டாக கிடைக்குறதே என்று கண்டுகொள்ளாமல் அகரம்சீகூரை சுடுகாடாக மாற்றியுள்ளனர் எது எப்படியோ மக்கள் காட்டில் மழையில்லை பெரம்பலூர் மாவட்ட அதிகாரிகள் காட்டில் பணமழைதான்.

- பொறுப்பு ஆசிரியர் M. இளவரசன்

**பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியம் அகரம்சீகூர் பஞ்சாயத்தில் தோண்ட தோண்ட ஊழல்.**

மனிதர்களை மலைக்கவைக்கும் ஊழல். எழுதுவதற்கே கூசும் ஊழல் என்னவென்று சொல்ல கடந்த மாதம் இதழில் இதே அகரம்சீகூர் பஞ்சாயத்தில் நடைபெறும் மெகா ஊழலை வெட்டவெளச்சம் போட்டுகாட்டிணோம் பலமிரடல்களை சந்தித்தோம்.



# தோண்ட தோண்ட தொடரும் ஊழல்

உண்மையை வெளிகொண்டுவர எந்தஅளவிற்கும் செல்வோம் என்பதை மீண்டும் ஒருமுறை நிருபணம் செய்யவாய்ப்பு கொடுத்த இறைவனுக்கு நன்றிகள் கோடி .தவறாக நினைக்க வேண்டாம் இறைவன் கோடிகளை சுருட்டவில்லை. அகரம்சீகூர் ஊராட்சி மன்றதலைவர் ச.முத்தமிழ்செல்வன் சுருட்டி மக்களை ஏமாற்றியுள்ளார். குழப்பம் வேண்டாம் நேரடியாக விசயத்துக்கு வருகிறேன் கடந்த 2019-2020 முதல் 2022-2023 வரை மத்திய நிதி 14 வது மானியநிதிகுழு மற்றும் 15 வது மானியநிதிகுழு மூலமாக மத்திய அரசு சுமார் 4 கோடியே 56 இலட்சரூபாய் அகரம்சீகூர் பஞ்சாயதிற்கு கடந்த மூன்று ஆண்டுகளில் மக்கள் நலனுக்காவும் அடிப்படை வசதிக்காகவும் பணம் வழங்கியுளது.

அந்த 4 கோடியே 56 இலட்சம் பணத்தில் அகரம்சீகூர் பஞ்சாத்து மக்களுக்கு 2 கோடியே 14 இலட்சம் செலவிடபட்டுள்ளது. மீதி 2 கோடியே 42 இலட்சம் ரூபாய் மக்களுக்காக வழங்க பட்ட மக்கள் பணம் பட்டைநாமம் போடபட்டுள்ளது. நாங்கள் ஆய்வு செய்த போது வருடதிற்க்கு 365 நாள் ஆனால் பஞ்சாயத்து செயலர் வருடத்திற்கு 223 பில் போட்டு (ரசீது) பல கோடி ஆட்டையை போட்டுள்ளனர். நாங்கள் கூறும் உண்மைகள் அனைத்தும் எங்கள் கற்பனையில் உதயமானது அல்ல உண்மையில் அறங்கேறிய ஊழல்கள்.

நாங்கள் ஆய்வு மேற்கொண்டது ஊராட்சி அலுவலகத்தில் அல்ல வட்டார வளர்ச்சி(ஊராட்சிகள்) அலுவலகத்தில் அல்ல. என்பதையும் தெறிவித்துகொள்கிறோம்இவர்கள் (BDO செல்வக்குமார்)அனைவரும் கூட்டு களவாணிகள் என்பதை மறக்கவேண்டாம். மாறாக இந்தியா முழுவதும் அனைத்து பஞ்சாயத்து வரவு செலவுகள். திட்டபணிகள். நடைபெறும் பணிகள். நடைபெற்ற பணிகள். நடைபெறபோகும் பணிகள்







அனைத்தும் ஒரே வெப்சைட்டில் அனைத்து பாமரனும் அறியும்படி அமைந்துள்ளதை தெரிவித்து கொள்கிறோம். அந்த வெப்சைட்டில் பார்க்கும் போது அகரம்சீகூர்காக ஒதுகீடு செய்யபட்ட வரவுசெலவுகள் அனைத்தும் காணலாம். இந்த வெப்சைட்டில் காணும் அனைத்தும் ஊராட்சி தலைவர் ஊராட்சி செயலர்களின் போலி பில் போட்ட கணக்குகள் தான் அதிகம் அதுகூட பறாயில்லைங்க யாரும் நேர்மையானவர்கள் அல்ல கடவுளை தவிர யாரும் நேர்மையான வர்கள் அல்ல. நாங்கள் கூறுவது வெப்சடில் தலைவர் சாப்பிட்டது போகமீதிபணத்தைதான் கணக்கில் வைப்பார்கள். அந்த வரவு செலவுகளிளே 2 கோடியே 42 இலட்ச ரூபாய் அளவிற்க்கு ஊழல் செய்துள்ளார் நமது அகரம்சீகூர் ஊராட்சி தலைவர் மற்றும் முன்னால்ஊராட்சி செயலர்(சுமதிசெல்வம்).

ஜல் ஜீவன் திட்டம் மூலம் வழங்க படும் புதிய குடிநீர் இணைப்பில் 5 குடத்திற்க்கு மேல் தண்ணீர் வருவதில்லை. அகரம்சீகூர் பஞ்சாயத்து மக்கள் அதிகமானோர் போர்வல் போட்டு மின்மோட்டார் பயன்படுத்தி தண்ணீர் பிடிப்பதில்லை ஏழை எளியமக்கள் குடிக்க. குளிக்க. பாத்திரம் கழுவ. துணிதுவைக்க. அன்றாட தேவைக்கு பஞ்சாயத்து குடிநீரை நம்பியே வாழ்க்கை நடத்துகிறாகள். தண்ணீர் பிரச்சனையை கண்டுகொள்ளாமல் பலகோடி பணம் சுருட்டுவதில்லே கவனம் செலுத்துகிறார்கள். ஊடக நண்பர்கள் நாங்கள் என்த்த சொல்ல!.

தலைவர் அவர்களே பணத்தின் மீது கண்வைத்த நேரம்போக கொஞ்சமாவது ஓட்டுபோட்ட மக்கள் நலனில் அக்கறை செலுத்துங்கள்.

தலைவரின் ஊழல்கள் அடுத்த இதழில் மீண்டும் தொடரும்...

- பொறுப்பு ஆசிரியர் M. இளவரசன்


# அடிப்படை வசதிகள் ஏதும் செய்யாமலேயே...!

# இரகசிய கிராம சபா கூட்டம்!



**கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம் அரசம்பட்டி பஞ்சாயத்து நடத்திய இரகசிய கிராம சபா கூட்டம் தோல்வியில் முடிந்தது.**

அடிப்படை வசதிகள் ஏதும் செய்யாமலேயே செய்து கொடுத்துவிட்டதாக போலி கணக்கு காட்டியதை கண்டித்து மீண்டும் அரசு அதிகாரிகள் முன்னிலையில் விரைவில் சிறப்பு கிராம சபா கூட்டம் நடைபெற வேண்டும் என அரசம்பட்டி பஞ்சாயத்து அலுவலகம் எதிரில் பொதுமக்களும், பெண்களும், இளைஞர்களும், அரசம்பட்டி உதவும் கரங்கள் அமைப்பின் நண்பர்களும் சர்வதேச மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் நிர்வாகிகளும் கண்டணம் தெரிவித்து கோஷமிட்டு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




அரசம்பட்டி உதவும் கரங்கள் அமைப்பின் நண்பர்களும் சர்வதேச மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் நிர்வாகிகளும் கண்டணம் தெரிவித்து கோஷமிட்டு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காவல் துறை அதிகாரிகள், மற்றும் பத்திரிக்கை, தொலைக்காட்சி நண்பர்கள் பேட்டி எடுத்தபடி இப்போராட்டம் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரடியாக களத்தில் ஆய்வு செய்து மக்களின் குறைகளை தீர்த்து வைக்கும்படி கோரிக்கைமனு காவல்துறை உயரதிகாரிகளிடம் அளிக்கப்பட்டது.

இக்கோரிக்கை மனுவை விரைவில் ஆட்சியரிடம் சமர்ப்பிப்பதாக வாக்குறுதி அளித்ததை தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது.

- கௌரவ ஆசிரியர் Dr. குமரவேல்

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம் ஏரிப்புரக் கரை (ராஜாமடம்). பெரிய ஏரி, சின்ன ஏரி. இது தஞ்சாவூர் மாவட்டத்தின் கடைகோடியில் அமைந்துள்ளது. இந்த ஊரின் அருகில் புதுக்கோட்டை மாவட்ட எல்லையும். சிறிது தூரத்தில் திருவாரூர் மாவட்ட எல்லையும் ஆரம்பம் ஆகிறது.

இந்த சிறிய ஏரியும் பெரிய ஏரியும் சுமார் 5 கிலோமீட்டர் சுற்றளவில் சுமார் 500 வருட பரம்பரியம்மிக்க ஏரியாகும்.

இந்த ஏரியில் சுமார் 100 மீட்டர் தூரத்தில் ராஜாமடம் ஆறும் சுமார் 1 கி.மீ தூரத்தில் கடல் கரையும் உள்ளது.

**நீர்வளத்துறை கண்காணிப்பு பொறியாளர் பார்வைக்கு!**

மேலும் ஏரியிருந்து சுமார் 25 மீட்டரில் முன்னாள் ஜனாதிபதி திரு.வெங்கட்ராமன் வீடும் உள்ளது. மேலும் இந்த ஏரியில் கோடைகாலத்தில் கூட நீர்வரட்ச்சி இல்லாத வற்றாத ஏரியாகும்.

மேலும் இந்த ஏரி சுற்றியுள்ள ஆயிரக்கணக் கான கிராமத்துக்கும் விவசாய தேவைக்கான நீர் ஆதாரமாக உள்ளது மேலும் இந்த ஏரியிலிருந்து சுமார் 20 மீட்டர் தூரத்தில் முன்னாள் முதலமைச்சர் திரு கருணாநிதி படித்த பள்ளிகூடமும் இங்குதான் உள்ளது.

மேலும் அங்கு படிக்கும் மாணவர்கள் உலக புகழ்பெற்ற ராஜாமடம் சத்திரத்தில் தங்கி படித்து வருகிறார்கள்.

# மணல் மாபியாவுடன் கூட்டு சேரும் உதவி இயக்குனர் சங்கர்





ஊராட்சி செயலாளர் கலாவின் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கும் உதவி இயக்குனர் திரு. சங்கர்







அதே மடத்தில் 100-க்கணக்கான ஆதரவற்ற முதியோர்களும் தங்கியுள்ளனர். மேலும் 200 மீட்டர் தூரத்தில் அண்ணா பொறியியல் கல்லூரியும் உள்ளது அங்கும் மாணவர்கள் தங்கி படித்து வருகிறார்கள். மேலும் சுமார் 50 மீட்டர் தூரத்தில் முளை வளர்ச்சி குன்றியவர்களின் பள்ளியும் உள்ளது.

ஏரியிலிருந்து சுமார் 20 மீட்டர் தூரத்தில் இரயில்பாதையும் உள்ளது. இத்தனை புகழ்வாய்ந்த ஏரியில் கிராமத்து மக்களும் மாணவர்களும் இதில்தான் குளித்துவருகிறார்கள்.

தற்போது ஏரிப் புறக்கரை அ.தி.மு.க. ஊராட்சி மன்ற தலைவர் சக்தி, ஊராட்சி செயலாளர் கலா மற்றும் பட்டுக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் கோவிந்தராஜ் தஞ்சாவூர் உதவி இயக்குனர் (ஊராட்சி) சங்கர் இவர்கள் அனைவரும் மணல் மாஃப்பியா கும்பலுடன் கூட்டுசேர்ந்து கொண்டு . ஏரியை தூர்வாரும் பணி என்று சொல்லிகொண்டு ஏரியில் உள்ள தண்ணீரை டாங்கர் லாரியில் உறிந்துவிற்பனை செய்து வருகிறார்கள்.

அதன்பிறகு ஏரியில் உள்ள மணலை JCB உபயோகித்து அள்ளி ஏரியை ஒட்டியுள்ள விவசாய நிலத்தின் உரிமையாளர்களை பார்த்து மணலை தாங்கள் இடத்தில் கொட்டிக்கொள்ளுங்கள் பிறகு பணம் பெற்றுக்கொள்கிறேன் என்றும் மேற்படி இடத்தை பிளாட் போட்டு விற்பனை செய்து கொள்ளுங்கள் ஊராட்சியில் அதற்கான அனுமதியை என் அதிகாரத்தை வைத்து தருகிறேன் என்றும் சுமார் ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலத்தில் மண்ணை கொட்டி விவசாயத்திற்கு சமாதி கட்டிவிட்டார்கள். இது சம்பந்தமாக அனைத்து கிராம மக்களும் அதிராம்பட்டினம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது சம்பந்தமாக அனைத்து கிராம மக்களும் பொதுபணித்துறையிடமும் ஏரிப்புறக் கரை கிராம நிர்வாக அதிகாரியிடமும், பட்டுக்கோட்டை வட்டாட்சியரிடமும் பட்டுக்கோட்டை கோட்டாட்சியரிடமும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரிடமும் புகார் கொடுத்தும் வழக்கம்போல் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கிராமவாசிகள் கூறுகிறார்கள்.

**ராஜாமட ஏரியின் சுற்றியுள்ள அனைத்து கிராமவாசிகளும் ஊராட்சி மன்ற தலைவர் சக்திக்கு பின்னனியில் எந்த சக்தி உள்ளது என்பதுதான் குழப்பம் என்று தெரிவித்தனர்.**

- தலைமை செய்தி ஆசிரியர் S. பதர் நிஷாபேகம்

## ஆட்சியர் வெறும் ரப்பர் ஸ்டாம்...



அதன் பிறகு தமிழ் மாநில கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயளாளர் பாலவை சாதிக்கிடம் கேட்டபோது அவர் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் வெறும் ரப்பர் ஸ்டாம்பாக இருப்பதுதான் இதற்க்கெல்லாம் காரணம் என்று ஒற்றை வார்த்தையில் முடித்துக் கொண்டார்.

## குழந்தைகளுக்கும்! வயதானவர்களுக்கும்! அபாயம்..!



இது சம்பந்தமாக சமூக ஆர்வாலர் S. அஹமது ஹாஜா கேட்டபோது மேற்ப்படி ஒரே சீராக மண் எடுக்காமல் சில குறிப்பிட்ட இடங்களில் மட்டும் தோண்டி தோண்டி வைப்பதால் நீர்வரத்து உள்ளபோது குழந்தைகளும் வயதானவர்களும் அதில் மாட்டிக் கொண்டு அபாயம் உள்ளதாக தெரிவித்தனர்.

## விவசாயத்தையே அழித்துவிட்டார்..



இதுதொடர்பாக வளரும் தமிழகம் கட்சியின் மாநில கொள்கை பரப்பு செயலாளர் ஜெய. விவகானந்தன் கேட்டபோது ஊராட்சி தலைவர் சக்தி அவர்கள் அங்குள்ள விவசாயிகளிடம் பிளாட் போட்டு விற்பனை செய்ய ஆசை வார்த்தை கூறி மண் இப்போது எடுத்தால்தான் உண்டு அதிகரிகளும் லஞ்சம் பெறுவதால் கேள்வி கேட்கமாட்டர்கள் நமக்கு இப்போதுதான் சூழ்நிலை சாதகமாக உள்ளது என்று கூறி நிலத்திற்கு மண்ணடித்து விவசாயத்தையே அழித்துவிட்டார் என்பது தான் நிதர்சனமான உண்மை என்று கூறினார்.

# சைபர் குற்றவாளிகள் கையாளும்

# 36 வகை தந்திரங்கள்...



❖ வங்கிகள் வாடிக்கையாளர்களை, ஒரு போதும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வங்கி விபரங்களை கேட்பதில்லை. மேற்படி அழைப்பை தவிர்ப்பது சிறந்தது. ஆகவே மேற்கண்ட விபரங்களை கேட்டு போன் செய்தால், எச்சரிக்கையாக இருக்கவும்.

❖ வங்கியில் இருந்து பேசுவதாக சொல்லி 1) A/C நெம்பர் 2) ATM DEBIT CARD நெம்பர், 3) PIN நெம்பர் 4) CVV நெம்பர், 5) OTP நெம்பர் 6) நெட் பேங்கிங் PASS WORD 7) CREDIT CARD நெம்பர் கேட்டால் தெரிவிக்க வேண்டாம். தெரிவித்தால் உங்கள் வங்கி கணக்கு HACK செய்யப்படலாம்.

❖ சுகாதாரதுறையில் இருந்து பேசுவதாகவும், தடுப்பு ஊசி போடப்பட்டவர்களுக்கு அரசு உதவி வழங்க விபரங்களை UPDATE செய்ய வேண்டும் என கேட்பது போல் விபரங்களை கேட்டு, உங்களது உங்கள் வங்கி கணக்கை குறிவைத்து 1) Bank A/c No, 2) Aadhar Card No, 3) PAN Card No, etc பெற்றுக்கொண்டு உங்கள் தொலைபேசிக்கு வந்த OTP விபரம் கேட்டு பணத்தை பறிக்க முயற்சி செய்யக்கூடும். விபரம் தெரிவித்தால் உங்கள் வங்கி கணக்கு HACK செய்யப்படலாம்.

❖ உங்கள் அக்கவுண்டில் இருந்து பணம் பிடித்தம் செய்யப்பட்டதாகவோ / லோன் தொகை பிடிக்கப்பட்டதாகவோ SMS அனுப்பி, செய்யவில்லை எனில், அந்த SMS உடன் உள்ள LINK ஐ CLICK செய்ய வலியுறுத்துவார்கள். CLICK செய்யாமல் அதை தவிர்க்கவும். தேவைபட்டால் வங்கிக்கு நேரில் சென்று விளக்கம் பெறவும். CLICK செய்தால் உங்கள் A/C ல் இருந்து பணத்தை கொள்ளை அடிக்க முயற்சிப்பார்கள்.

❖ KYC / PAN / AADHAR NO விபரங்கள் குறித்து கேட்டாலோ, SMS/ LINK அனுப்பினாலோ UPDATE செய்யவேண்டாம். வங்கிக்கு நேரில் சென்று தேவைப்பட்டால் ஆவணங்களை கொடுக்கவும்.

❖ BANK ACCOUNT-டிற்கான செல்போன் / ATM Card தொலைந்து போனாலோ / திருட்டு போனாலோ உடனடியாக வங்கிக்கு நேரில் தெரியபடுத்தி விரைந்து BLOCK செய்யவும்.

❖ வளைதளத்தில் தேடப்படும் வங்கி கஸ்டமர் கேர் எண்கள் போலியாக இருக்க வாய்ப்பு உள்ளது. CUSTOMER CARE CALLS செய்பவர், உங்களுக்கு உதவுவது போல் LINK அனுப்பியோ / SCREEN SHARE செய்ய விலியுறுத்தியோ OTP விபரங்கள் பெற்றும் உங்கள் A/C ஐ HACK செய்யபடலாம். எச்சரிக்கையாக செயல்படவும்.

❖ உங்களது தனிப்பட்ட புகைபடங்களை

ஒருபோதும் யாரிடமும் பகிர வேண்டாம். அதை MORPHING செய்து பணம் பறிக்கவும் / வேறு வகையில் உங்களை மிரட்டவும் நேரிடலாம்.

❖ Face bookல் உங்களுக்கு தெரிந்தவர் பெயரில் போலி கணக்கு துவங்கி உங்களிடம் பண உதவி கேட்க வாய்ப்புண்டு, எனவே பணம் அனுப்பும் முன் அவரிடம் நேரிலோ, தொலைபேசியிலோ உறுதி செய்யவும்.

❖ SOCIAL MEDIA-களில் உங்கள் தனிப்பட்ட விபரங்களை யார் யாரெல்லாம் பார்க்கவேண்டும் / பார்க்க கூடாது என்பதை PRIVACY SETTINGS ல் தெளிவாக குறிப்பிடவும்.

❖ SOCIAL MEDIAவில் உங்களது அன்றாட இருப்பிடம் மற்றும் நடவடிக்கைகள் பற்றிய LIVE UPDATE பதிவுகள் குற்றவாளிகளால் கவனிக்கப்படுகிறது என்பதை உணருங்கள்.

❖ SOCIAL MEDIAவில் வரும் LINK ஐ, CLICK செய்தால், Bank a/c HACK ஆக வாய்ப்புள்ளது.

❖ பொது இடங்களில் வைக்கப்பட்ட USB சார்ஜர்களில் சார்ஜ் போடுவதை தவிர்க்கவும், உங்களது தகவல்கள் (JUICE JACKING) முறையில் திருட்டு போக வாய்ப்புள்ளது.

❖ பொது இடங்களில் உள்ள WI-FI பயன்படுத்தும்போது உங்கள் மொபைல் HACK செய்யப்படலாம்.

❖ குறைந்த விலையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக SOCIAL MEDIA தகவலின் அடிப்படையில் பொருள் வாங்கும் போது மிக கவனமாக செயல்படவும். (Fake website ஆக இருக்கலாம்)

❖ செல்போன் Tower அமைக்க இடம் தேவை, மாதம் ரூ 30,000 வாடகை, 30 லட்சம் முன்பணம் வழங்கப்படும் என வரும் செய்திகளை நம்பி பணம் செலுத்தி ஏமாற வேண்டாம்.

❖ APPகளின் விபரங்களை முழுவதும் அறியாமல் Download செய்யவேண்டாம். உங்களது தகவல் / வங்கி கணக்கு திருட்டு போக வாய்ப்புள்ளது.

❖ ஆர்வத்தை தூண்டும் தலைப்புகளில் வரும் செய்தி LINK களுக்கு பின்னால் தகவல் / பணம் பறிக்கும் கும்பல் மறைந்திருக்கிறார்கள் என்பதை உணர்வீர்.

❖ முதலீடு செய்யும் பணத்திற்கு தினசரி 1% கமிஷன் வழங்கப்படும் என வரும் விளம்பரத்தை நம்பி பணத்தை முதலீடு செய்யாதீர்கள். மாதத்திற்கு 30% கமிஷன் யாராலும் தரமுடியாது என்பதை சற்று நிதானமாக யோசித்து பாருங்கள்.

❖ PART TIME JOB / WORK FROM HOME / DAILY EARN Rs 200/- to 3,000/- என வரும் தொகைக்கு ஆரம்பத்தில் கமிஷம் முதலீடு செய்யாதீர்கள். பெரும் தொகை அவர்கள் கைக்கு சென்றால் திரும்ப கிடைக்காது. விளம்பரங்களை பார்த்து செலுத்தும் சிறு




தொகை வழங்கப்படுவதை நம்பி பெரும் தொகையை இழந்து விடாதீர்கள்.

❖ உங்கள் தொலைபேசி எண்ணுக்கு விலை மதிப்புமிக்க பரிசு விழுந்துள்ளது என வரும் தகவலை நம்பி அதை பெற அவர்களால் சொல்லப்படும் எந்த கட்டணத்தையும் செலுத்தாதீர்கள்.

❖ DEPOSIT இருந்தால் லோன் வழங்கப்படும் என வரும் விளம்பரத்தை நம்பாதீர்கள். லோனுக்காக செலுத்தும் சேவை கட்டணங்கள் லோனுடன் திருப்பி செலுத்தப்படும் என நம்ப வைத்து பணம் பறிக்கப்படுகிறது. ஏமாறவேண்டாம்.

❖ அறிமுகம் இல்லாதவர்களிடம் WhatsApp Call லில் பேச வேண்டாம். உங்கள் செல்போனில் உள்ள FRONT CAMERAவினால் எதிர் தரப்பில் உள்ளவர்களால், உங்களின்

நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்டு, அந்த பதிவுகளை உறவினர்களுக்கோ/ SOCIAL MEDIA-வில் போட்டுவிடுவோம் என உங்களை மிரட்டி பணம் பறிக்க வாய்ப்புள்ளது.

❖ ONLINEல் வேலை தரப்படும் என ஆசையை தூண்டும் விளம்பரங்கள் மூலம் உங்களை நம்ப வைத்து, உங்களிடம் சேவை கட்டணம் என்ற பெயரில் பணம் பறிக்க வாய்ப்புள்ளது. பணம் செலுத்தும் முன், அந்த நிறுவனத்தை பற்றியும், அவர்களால் வேலை பெற்றவர்கள் விபரங்களை கேட்டு பெற்று வேலை பெற்றவர்கள் இல்லத்துக்கே சென்று உறுதி செய்யுங்கள்.



❖ PASSWORD விபரங்களை எவ்வளவு நம்பிக்கைக்கு உரியவராக இருந்தாலும் ஒருபோதும் கொடுக்க வேண்டாம். அடிக்கடி Password ஐ Change பண்ணவும்.

பல வங்கி கணக்கு வைத்துள்ளவர் எனில் அனைத்துக்கும் ஒரே Password கொடுக்காதீர். தங்களது ஒரு வங்கி கணக்கு பாதிக்கப்படடால் மற்ற எல்லா கணக்கும் பாதிக்கப்படும்.

❖ SOCIALMEDIA வில் தனிப்பட்ட தகவல்கள் (முகவரி, தொலைபேசி எண். படித்த பள்ளி பெயர், நிரந்திர மற்றும் தற்காலிக இருப்பிடம்) போன்றவற்றை வெளிப்படையாக தெரியாமல் PROFILE LOCK செய்யவும்.

❖ பெற்றோர் மேற்பார்வை இல்லாமல், அறிமுகம் இல்லாத நபர்களிடம் ஆன்லைனில் பழகிய யாருடனும் நேரில் சந்திக்க ஒப்புக்கொள்ள கூடாது.

❖ அச்சுறுத்தலான E-mail, Message, Post போன்ற தகவல்களுக்கு பதில் அளிக்க வேண்டாம்.

❖ பயமுறுத்தும் அல்லது புண்படுத்தும் வகையிலான ONLINE / SOCIAL MEDIA உரையாடல்களை பெற்றோர் அல்லது நம்பகமான பெரியவர்களிடம் உடனே தெரிவிக்க வேண்டும். உதவிக்கு அருகில் உள்ள சைபர் கிரைம் காவல் நிலையத்தை தொடர்பு கொள்ளவும்.

❖ SHARE MARKET-ல் நஷ்டம் இல்லாமல் செய்துதரப்படும் என தொலைபேசியில்/ SMS ல் LINK மூலம் அனுகினால் எச்சரிக்கையாக இருக்கவும். உங்கள் பணம் குறி வைக்கப் படுகிறது. ஜாக்கிரதை.

❖ Scratch card offer To receive Rs 4900/- enter pin என அனுப்பி உங்கள் வங்கி கணக்கில் இருந்து பணம் பறிக்கபடும்.

❖ கடைகளில் ஒட்டப்பட்டுள்ள QR CODE-களை கடை உரிமையாளர்களுக்கு தெரியாமல் குற்றவாளிகளால் மாற்றி வைக்கப்படுவதால், கடை உரிமையாளர்களும், பணம் செலுத்துபவர்களும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே QR CODE-களை பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

❖ பொது இடங்களில் தனி DEBIT / CREDIT CARD பயன்படுத்தவும். அவைகளில் தேவைக்கு ஏற்ப பணம் இருப்பு வைத்தால் பெரும் சேதம் ஏற்பாடமல் பாதுகாக்கலாம்.

❖ தவறான அறிந்தவுடன் உடனடியாக NATIONAL HELPLINE TOLL FREE NO /155260 எண்ணுக்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தால் சைபர் குற்றவாளிகள் கைகளுக்கு செல்லாமல், பணம் பரிவர்த்தனையை தடுத்து நிறுத்த இயலும்.

❖ பெரும் சேமிப்பு உள்ள வங்கி கணக்கிற்கு CELL NO / DEBIT / CREDIT CARD/ NET இணைக்காமல் இருப்பது சிறந்தது.

❖ தினசரி பண பரிமாற்றத்துக்கு தனி வங்கி கணக்கு குறைந்த இருப்பில் வைத்து பத்திரமாக கையாளவேண்டும். தவறு நடைபெற்றாலும், பெரும் நஷ்டம் ஏற்டாமல் தவிர்க்க உதவும்.

**- கௌரவ இணை ஆசிரியர் A. கேம்ராஜ்**

**Owned and Published by M.ABDUL RAHMAN from No.61, Venkata Mesthiri Street, Mannadi, Chennai-600 001 and Printed S.ALI MOHAMED SAYEED by J.M.PROCESS, at 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-600 014. Editor: K.MADHUSUDHANAN**




# பணம் (அ) பொருட்களை கேட்டால் கூலி படையை அனுப்பி கொலை செய்வேன்:

## இடத்தின் உரிமையாளர் ஹரீஸ் மிரட்டல்

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வட்டம் பாகலூர் ரோட்டில் தாசிரிபள்ளி என்னுமிடத்தில் அமைந்துள்ள APM டிசைன் பில்ட் பிரைவேட் லிமிடெட் என்னும் கட்டுமான உதிரிபாகங்கள் தயாரிப்பு நிருவனம் இயங்கி வந்தது இதன் உரிமையாளர் பிரித்திவிராஜான் என்பவர் வங்கி மற்றும் மூலப்பொருட்களை சப்ளை செய்யும் கம்பெனிகளை திட்டமிட்டு ஏமாற்றும் நோக்கில் தொடக்கத்திலிருந்தே (2022 ஏப்ரல் முதல்) யாருக்கும் சரிவர பணம் தராமல் ஏமாற்றி வந்துள்ளார்.

இதில் மிகாவும் மோசமாக பாதிக்கப்பட்டது SKT டிரேடர்ஸ் என்ற நிருவனமாகும்.

இதுபற்றி SKT டிரேடர்ஸின் உரிமையாளர் திரு.கேம்ராஜ் அவர்கள் நமது நிருபரிடம் விளக்கத்தினை பகிர்ந்து கொள்கிறார்.

நான் பல சிரமங்களுக்கு மத்தியில் மிகவும் சவாலான சூழ்நிலையில் எனது நிறுவனத்தை நடத்தி வந்தேன் அப்போது கடந்த வருடம்

ஏப்ரல் மாதம் APM டிசைன் பில்டு பிரைவேட் லிமிடெட் என்ற நிருவனத்தின் உரிமையாளர் திரு. பிரித்திவிராஜன் என்பவர் என்னை அணுகி அவரது நிருவனத்திற்க்கு ஹேண்ட் டூல்ஸ், பவர் டூல்ஸ், பெயின்ட், மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் போன்ற பொருட்கள் வேண்டும் என கேட்டுக்கொண்டதன்பேரில் முறையான பில் மற்றும் அனைத்துவரி உட்பட முறையாக அவரது நிருவனத்துக்கு சப்ளை செய்து வந்தேன் தொடக்கத்தில் சிறிய கணக்குகளுக்குண்டான தொகையை அவரும் எனக்கு வழங்கி வந்தார் பின்பு காலம் செல்ல செல்ல பணம் கேட்ட போது பல காரணங்கள் சொல்லி தட்டி கழித்து வந்தார் அவரை பற்றி விசாரித்தபோது அவர் இந்த நிருவனத்தை தொடங்கியதே நஷ்ட கணக்கு காண்பித்து வங்கியை ஏமாற்றி திவாலானதாக அறிவித்துவிட்டு காப்பீட்டு தொகையை வாங்கி இதில் கடன் கொடுத்தவர்களையெல்லாம் ஏமாற்றி இதில் கிடைக்கும் தொகையை வைத்து வேறு இடத்தில் பினாமி பெயரில் சொத்துக்களை வாங்கி குவித்து வேறு கம்பனி அமைத்து வசதியாக வாழ்வதற்காகதான் இதெல்லாம் செய்தது என்று தெரியவந்தது.



நிறுவன உரிமையாளர்
ப்ரித்திவிராஜ்
APN பில்ட் டெக் பிரைவட் Ltd



கட்டிட உரிமையாளர் ஹரீஸ்

தற்போது அது நடைமுறையில் உள்ளதை காணமுடிகிறது.

எனக்கு கிட்டதட்ட 23,60,736/– ரூபாயை நிலுவையில் வைத்து ஏமாற்றி விட்டு நிருவனத்தையும் மூடிவிட்டு தப்பி சென்று விட்டார் நான் அவரை பலமுறை தொடர்புகொள்ள முயற்சி செய்து பல பொருட்செலவுகள் செய்து கடைசியாக அவரை கடந்த பிப்ரவரி மாதம் கண்டுபிடித்து எனக்கு நீதிவேண்டுமென வற்ப்புறுத்தியதால் அவரது கம்பனியில் உள்ள சில பொருட்களை எனக்கு சேரவேண்டிய தொகைக்கு ஏற்ப்ப எடுத்துக் கொள்ளும்படியும் கூறி அவரது நிறுவன லெட்டர் பேடில் எழுதி கொடுத்தார் அவரால் நேரில் வரமுடியாததால் என்னையே ஆள் வைத்து எடுத்துக்கொள்ளும் படி அனுமதி அளித்தார் நானும் இதை நம்பி ஆட்களை அழைத்துக் கொண்டு அந்த நிருவனத்திற்கு சென்றபோது அந்த கட்டிடத்தின் உரிமையாளர் என கூறிக்கொண்டு வந்த ஹரீஸ் என்பவர் அடியாட்களை கூட்டி வந்து எனக்கும் பணம் கிடைக்க வேண்டியுள்ளது அதனால் நான் பெருட்களை இங்கிருந்து எடுத்து கொண்டு போக சம்மதிக்க மாட்டேன் எனவும் மீறினால் யாரும் இங்கிருந்து உயிருடன் போகமுடியாது எனவும் கூறி மிரட்டல் விடுத்ததால் பொருட்களை எடுப்பதில் தொய்வு ஏற்பட்டுள்ளது.

எனவே APM டிசைன் பில்ட் பிரைவெட் லிமிடடின் உரிமையாளர் பிரித்திவிராஜனும் கட்டிட உரிமையாளர் ஹரீஸ் அவர்களும் கூட்டாக சேர்ந்து கொண்டு அனைவரையும் ஏமாற்றியது தெரியவந்துள்ளது இவர்கள் இருவரும் வெளியே எதிரிகள் போல் காட்டிக்கொண்டு உள்ளுக்குள் கூட்டு சதி செய்துவந்தது அம்பலமாகிறது.

பின்னர் மீண்டும் இது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தும் எந்தவித பயனும் இல்லை இதுசம்பந்தமாக பாதிக்கப்பட்ட எனக்கு நியாயம் கேட்க மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் நிர்வாகிகள் உண்ணாவிரத போராட்டத்தை நடத்தப்போவதாக அறிவித்திருப்பது ஆறுதல் அளிப்பதாக உள்ளது என அவர் தெரிவித்தார்.

- ஆசிரியர் K. மதுசூதனன்